**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**M.C.O.P.No.127/2019**

| | | |
|---|---|---|
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கார்த்திக் |
| தகப்பனார் / கணவர் | .. | சக்திவேல் |
| வயது | .. | 26 |
| தொழில் | .. | சட்ட மேலாளர் |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | சென்னை |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் நாள் திங்கள்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

நான் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் இருந்து பெறப்படவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து பெறப்பட்டது. இறுதி அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள் 17.06.2019 என்று உள்ளது என்றால் சரிதான், ஆனால் பிரின்ட் எடுத்த தேதி 22.09.2020 என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி நான் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கை பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்து எங்கள் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் மீது வழக்கு பதிவு செய்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கக்கூடாது என்பதற்காக போலிசார் பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் நிறுவனத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு, எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைபட்டது என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**